# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

**செய்தி தகவல் எண். 7/2016** **நாள் 06.08.2016**

**வாக்குச்சாவடி அமைத்தல், வாக்குச்சாவடி மையங்களில் அமைக்கப்பட வேண்டிய வசதிகள் மற்றும் ஆயத்த பணிகள் குறித்த வழிகாட்டுதல்கள்**

2016, உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெற உள்ளதை முன்னிட்டு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடிகள் அமைக்க, அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் பல்வேறு வழிகாட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி:-

அ) மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடங்கள், அரசுப் பள்ளி கட்டடங்கள், அரசு உதவி பெறும் மற்றும் பிற பள்ளிக் கட்டடங்கள், அரசு கட்டடங்கள் போன்றவற்றிற்கும், ஏற்கனவே சட்டமன்ற தேர்தலுக்கு வாக்குச்சாவடியாக அப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட கட்டடத்திற்கும், முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஆ) கட்டடம் தேர்வு செய்யும் போது மிகவும் பழமையான கட்டடமாக அல்லாமலும், இயற்கை சேதங்களை தாங்க கூடியதாகவும், பாதுகாப்பாக தேர்தலை நடத்த ஏதுவானதாகவும், இருக்கும் வகையில் தேர்வு செய்ய வேண்டும்.

இ) காவல் நிலையம், ஊராட்சி அலுவலகம், விருந்தினர் தங்கும் விடுதி, வழிபாட்டுத்தலங்கள், சத்துணவு கூடம், மருந்தகம், சத்திரங்கள் போன்ற இடங்களை வாக்குச்சாவடிகளாக அமைக்க தேர்வு செய்யக் கூடாது.

ஈ) கிராம புறங்களில் அதிகபட்சம் இரண்டு வார்டுகளுக்கு சேர்த்து 1000 வாக்காளர் வரை ஒரு வாக்குச்சாவடியில் இணைக்கலாம். நகர்ப்புறங்களில் 1200 வாக்காளர் வரை ஒரு வாக்குச்சாவடியில் இணைக்கலாம். மாநகராட்சி பகுதிகளில் 1400 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி வீதம் அமைக்கலாம்.

வாக்குச்சாவடி அமைக்க இடங்கள் கண்டறியப்பட்ட பின், வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நாளில் வாக்குப்பதிவு அலுவலர்கள், வாக்காளர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோருக்கு தேவைப்படும் அனைத்து பிற வசதிகளையும், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும், சென்னை மாநகராட்சி ஆணையரும் செய்து தர வேண்டும்.

1. வாக்குப்பதிவு நாளுக்கு முன்னரும் பின்னரும், வாக்குச்சாவடி மையங்களில் போதுமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.

2. வாக்குப்பதிவு மையங்களிலுள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்தும் நிலையிலும், சுகாதாரமான முறையிலும் பராமரிப்பதை உறுதி செய்தல்.

3. முறையான மின் வசதி மற்றும் அனைத்து விளக்குகள், மின் உபகரணங்கள் பொருத்த தேவையான மின் செருகிகள் (Plug Points) ஆகியவை முறையாகச் செயல்படுத்துவதை உறுதிபடுத்துவதன் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் காணொலி படமெடுத்தல் ஆகியவற்றின் செயல்பாடுகள் தடையற இயங்கும் வகையில் பராமரிக்க வேண்டும். மேலும் தடையற்ற மின்சாரம் வழங்குவதை உறுதி செய்தல்.

4. அக்டோபர் மாதம் மழைக்காலம் என்பதால் வாக்கு மைய கூரைகள் ஒழுகாமல் பழுது நீக்கவும் மற்றும் மின் கசிவு ஏற்படாவண்ணம் பழுது பார்த்து பராமரித்தல்.

5. மழைக்காலம் என்பதால் வாக்குப்பதிவிற்கு முன்னரோ, வாக்குப்பதிவு நாளிலோ மழைநீர் தேங்கி, அடைப்பு ஏற்படாமல் எளிதில் வெளியேறும்படியாக பராமரிப்பதை உறுதி செய்தல்.

6. மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் வாக்கு மையங்களில் எளிதாக வாக்களிப்பதற்கு ஏதுவாக சரிவு பாதைகள் அமைத்து வசதிகள் ஏற்படுத்துதல்.

7. வாக்குப்பதிவு பொருட்களை பாதுகாப்பாக வைத்திடுவதற்கு ஏதுவாக பூட்டி திறக்கும் வகையிலான கதவமைப்பு ஆகியவற்றை பழுது பார்த்து சரிசெய்தல்.

8. ஆண் மற்றும் பெண் வாக்குப்பதிவு அலுவலர்கள் வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய தினமே வாக்கு மையத்திற்கு வர வேண்டியுள்ளதால் அவர்களுக்கு தனித்தனியாக தங்குவதற்கான பாதுகாப்பு வசதிகளை அமைத்து, முற்றிலும் தகுதியான நிலையில் பராமரித்தல்.

9. அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் மேற்காணும் அனைத்து மராமத்து பணிக்கான செலவினங்களை அவர்களது உள்ளாட்சி நிதியிலிருந்தே மேற்கொண்டு முழுமையாக பராமரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. மண்டல குழுக்கள் (Zonal Teams) அமைப்பது தொடர்பான பணியினை முன்கூட்டியே திட்டமிட்டு, தொடர்புடைய அலுவலர்களது பெயர் மற்றும் கைபேசி எண்கள் ஆகியவற்றை தகவல் தொடர்பு திட்டத்தில் (Communication Plan) சேர்த்து அவற்றை வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

11. அவசரத் தேவைக்கு பயன்படுத்தும் வகையில் வாக்குப்பதிவு மையத்திற்கு அருகாமையில் உள்ள தொலைபேசி எண் (Landline Number) பற்றிய விவரத்தையும் சேகரித்து தகவல் தொடர்பு திட்டத்தில் சேர்த்து மண்டலக்குழுக்கள் மற்றும் நடமாடும் குழுக்களுக்கு (Mobile Teams) அளிக்கப்படுவதை உறுதி செய்தல்.

12. வாக்குச்சாவடிகள் செயல்படும் இடத்திற்கான செயல் எல்லைகளிலுள்ள காவல் நிலையம்/காவல் அலுவலர்கள், ஆரம்ப சுகாதார மையங்கள்/ அலுவலர்கள், தீயணைப்பு நிலையங்கள்/அலுவலர்கள், ஆகியோரது தொலைபேசி எண்களையும் தகவல் தொடர்பு திட்டத்தில் சேர்த்து வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

13. மின் பொறியாளர்கள் மற்றும் பாரத மின்னணு குழுமம் (Bharat Electronics Limited) தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய தொழில்நுட்ப உதவி குழு ஒன்று அமைத்து குழுவில் உள்ளவர்களின் தொலைபேசி / கைபேசி எண்களையும் தகவல் தொடர்பு திட்டத்தில் இணைத்து வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு வழங்க வேண்டும்.

14. தகவல் தொடர்பு செயல்திட்டத்துடன் நகரும் குழுக்கள் மற்றும் மண்டல குழுக்கள் பயன்படுத்தும் வழித்தட வரைபடமும் தயாரித்து அளித்திடல் வேண்டும்.

15. பல்வேறு துறைகளின் தலைமையோடு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஏற்பாடு செய்து அத்துறைகளின் வாகனங்களை திரட்டிப் பெற்று தேர்தல் பணிக்காக பயன்படுத்தவும் அவ்வாறான வாகனங்களின் இயக்கம் மற்றும் செயல்பாடு நல்ல நிலையில் உள்ளது என்பதை உறுதி செய்து வாக்குப்பதிவு தினத்திற்கு முந்தைய நாளன்று தேர்தல் பணி தொடர்பாக இடர்பாடுகளற்ற இயக்கத்தினையும் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

16. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் சுமுகமாக தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து வாக்கு மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சரித்தன்மையை உரிய ஆய்வு அலுவலர்களை நியமித்து உறுதிபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக தொலைதூர வாக்கு மையங்கள், பெண்களுக்கான அனைத்து வாக்கு மையங்கள், பதற்றம் மற்றும் மிகவும் பதற்றமான வாக்கு மையங்களில் 100 சதவீதம் மாவட்ட அளவிலான அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வழிகாட்டுதல்களை அனுப்பியுள்ளது.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

06/08/16

மக்கள் தொடர்பு அலுவலர்